அசல் வழக்கு 53/2021
நாள் 17.10.2025
பி.வா.சா. :1
பெயர் : சந்திரன்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஓட்டுநராக வேலை செய்து வந்தேன் 2016ம் ஆம் ஆண்டு முதல் ஓட்டுநர் பணி செய்வதில்லை. என் சொந்த ஊர் கங்கை கொண்ட சோழபுரம் அருகில் உள்ள குருவாரப்பர் கோவில். வாதிகள் இருவரும் என் சித்தி மகன்கள். அவர்கள் கடலங்குடியில் வசித்து வருகிறார்கள். நான் பிறந்தது என் சொந்த ஊரில் கடலங்குடிக்கு வந்து ஐம்பது ஆண்டுகளாகிறது. கடலங்குடியில் என் சித்தி குடும்பமும் என் அத்தை குடும்பமும் இருந்தாதல் அவர்களை நம்பி என் தாய் முதலில் வந்தார் அதன்பிறகு நான் வந்தேன். 1984லேயே டிரைவர் வேலைக்காக நான் கடலங்குடியிலிருந்து வெளியே வந்துவிட்டேன். சென்னை ராயபுரத்தில் மட்டும் தான் தங்கியிருந்தேன். எனக்கு 28ம் வயதில் திருமணமானது. நான் 01.07.1965 அன்று பிறந்தேன். நான் குடும்பத்துடன் கடலங்குடியில் திருமணத்திற்கு பிறகு வசிக்கவில்லை சென்னைக்கு அழைத்து சென்றுவிட்டேன். 2008ம் ஆம் ஆண்டு என் குடும்பத்தை கடலங்குடி கிராமத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் சென்னையில் தங்கியிருந்தபோது வாதிகளின் சகோதரர் வக்கீல் ரத்தினவேல் வீட்டிற்கு அடிக்கடி செல்வதுண்டா என்றால் இல்லை நான் போகமாட்டேன் அவர் வருவார். என் மனைவி மற்றும் குழந்தைகள் யாருடையா பாதுகாப்பிலும் இல்லை நானே ஒரு வீடு எடுத்து தங்க வைத்திருந்தேன். நான் கடலங்குடியில் வாடகை வீட்டில் தான் தங்க வைத்தேன். அந்த வீட்டில் அவர்கள் தங்கியிருந்தார்கள் நான் வேலைக்காக சென்னைக்கு வந்து

போவேன். வாதிகள் வீடு நாங்கள் வாடகைக்கு எடுத்திருந்த வீட்டிற்கு ஒரு 5, 6 வீடு தள்ளயிருந்தது. வாதியின் குடும்பத்தார்களும் எங்கள் குடும்பத்தினரும் ஒற்றுமையாக இருந்தார்கள் என்றால் 1ம்வாதியின் மனைவி கவியரசியும் என் மனைவி அன்பரசியும் உடபிறந்தவர்கள் எனவே ஒருவருக்குள் ஒத்தாசையாக வாழ்ந்தார்கள். வாசாஆ 3 ஆவணத்தை பிரதிவாதியிடம் காட்டி கேட்டபோது அதில் உள்ளது என் மனைவி அன்பரசியின் கையெழுத்து என்று ஒப்புக்கொண்டார். 2ம் வாதி குணசேகரன் வெளிநாட்டில் வேலை செய்தது எனக்கு தெரியும் 2006ல் வெளிநாட்டில் வேலை செய்தார். அனுப்பி வைத்ததே நான் தான். அவர் எத்தனை வருடம் வெளிநாட்டில் வேலை செய்தார் என்று எனக்கு தெரியாது. எனக்கு 4 ஏக்கர் 66 செண்ட் நிலம் கடலங்குடியில் இருந்தது. அது நான் சம்பாதித்து வாங்கியது. அந்த சொத்தை நான் 2ம் வாதிக்கு கிரயம் செய்து தருவதாக சொல்லவில்லை. அதற்கான கிரய தொகையாக 16,47,037/- ரூபாய் 2011 முதல் 2017 வருடகாலத்தில் என் மனைவி அன்பரசி பெயரிலும் என் மகள் அனிதா பெயரிலும் வங்கி மூலமும் அந்நிய செலவாணி ஏஜென்சி வழியாகவும் 2ம் வாதி குணசேகரன் அனுப்பினார் என்றால் சரிதான். 2008ல் மாப்படுகையில் ஒரு இடம் வாங்கினார், பிறகு அவர் கட்டிய வீடு, அவர் திருமண செலவு, அவரின் தம்பி திருமண செலவு, அவர்களின் படிப்பு செலவிற்கு வேண்டி அந்த பணத்தை எடுத்து வாதியின் தாயாரிடம் கொடுத்துவிட்டார். அந்த பணத்தை என் மகளும் மனைவியும் தான் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல என் மனைவிதான் கொடுத்தார். அவர்கள் கொடுத்ததை நான் பார்க்கவில்லை அந்த இடத்தில் நான் கிடையாது என்றால் சரிதான். என் மனைவி வந்து சாட்சி சொன்னதால் அந்த விவரம் தெரியும் என்றால் சரிதான். வாசாஆ 4 ஆவணம் ஒரு அந்நிய செலவாணி நிறுவனம் கொடுத்த ஸ்டேட்மென்ட்

என்றால் சரிதான். அதில் 2011 முதல் 2015 வரை என் மனைவி அன்பரசி, 1ம் வாதி, என் மகள் சீத்தாலட்சுமி, வாதியின் சகோதரர் ரத்தினவேல், 2ம் வாதியின் நண்பர் விஜயக்குமார் பெயரிலும் பணம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 5 ஆவணத்தில் அல் ரசூகி என்ற அந்நிய செலவாணி நிறுவனம் வழங்கிய ஸ்டேட்மெண்ட் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 2013 – 2018 வரையான காலகட்டத்தில் என் மனைவி பெயரிலும், 1ம் வாதி பெயரிலும், 2ம் வாதி குணசேகரன் வங்கி கணக்கிற்கும், 2ம் வாதியின் மனைவி கார்த்திகா பெயரிலும், கலாவதி, ஜெயதேவி, தியாகராஜன், செல்வக்குமார், விஜயராகவன், வாதியின் சகோதர் ரத்தினவேல் பெயரில் பணம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 4 மற்றும் 5 ஆவணத்தின் அடிப்படையில் 1ம் வாதி அன்பழகன் பெயரிலும் அவரின் சகோதரர் ரத்தினவேல் பெயரிலும், 2ம் வாதி பெயரிலும், இதர நண்பர்கள் பெயரிலும், 39,20,000/- பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வீடு கட்டுவதற்கு 2ம் வாதி வங்கியில் கடன் வாங்கினார் என்பது எனக்கு தெரியும்.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

17/10/...

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை